கேளிக்கை வரிச் சலுகையளிக்கப்பட்ட திரைப்படங்கள்

*65 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-71 ஆம் வருடத்தில் கேளிக்கை வரிச் சலுகை கோரி பெறப்பட்ட மொழிவாரி திரைப்பட விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அவற்றில் எத்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இந்தி 11; பஞ்சாபி 1.

(இ) எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

திரு. அ. தேவேந்திரன் : துணைத் தலைவரவர்களே, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை பரப்புகின்ற திரைப்படங்களுக்கு இப்படிப்பட்ட வரிச் சலுகை அளிக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி வரிச் சலுகை அளிக்கப்படுவது உண்டு. ஆனால் இந்த வினாவுக்குச் சம்பந்தப்பட்ட படங்களுக்கு அளிக்கப்பட வில்லை.

திரு. எம். தேவராசன் : துணைத் தலைவரவர்களே, வேறு மொழிகளிலுள்ள படங்களுக்கு வரிச் சலுகை அளிக்கப்படும்போது, இதுவரை எந்த ஒரு தமிழ்ப் படத்திற்கு வரிச்சலுகை அளிக்கப்படாததற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் கொடுத்த தகவலில் எந்தப் படத்திற்கும் வரிச்சலுகை அளிக்கவில்லை என்பதுதான்.

THIRU A. SUBRAMANIAM : May I know what are the criteria followed by the Government in the matter of grant of these concessions?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்கு என்று தனித் தகுதி ஒன்றும் இல்லை. சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட படமாக இருந்தால், சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பம் வந்தால் அதை அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அகில இந்திய அடிப்படையிலும், தமிழகத்திலும் சிறந்தப் படங்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் படங்களுக்கும், சிறந்த நடிகர்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நடித்த படங்களுக்கும் இப்படிப்பட்ட வரிச் சலுகை அளித்து மேலும் அவர்களை ஊக்குவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவ்வாறு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று மனு வந்தால், அதன் தகுதி அடிப்படையில் அரசு அதைப் பரிசிலனை செய்து முடிவெடுக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is great demand for Telugu films in southern districts since thousands of telugu people live there. If they see telugu films they feel happy. So, will the Hon. Minister consider the question of showing some concession for the exhibition of telugu films in southern districts?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நமக்கு மொழியைப் பற்றி பிரச்சனை இல்லை. ஆனால் படத்தின் கருத்தையும், தகுதியையும் பார்த்து வரி விலக்களிப்பது பற்றி முடிவெடுக்கப்படும்.

திரு. கு. காமாட்சி: துணைத் தலைவரவர்களே இப்போதெல்லாம் 'அட்ல்ட்ஸ ஒன்லி' என்ற படங்களுக்குத்தான் அதிக வசூலாகிறது. எனவே அந்த மாதிரிப் படங்களுக்கு கேளிக்கை வரியை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அடிக்கடி அந்தப் படங்களுக்குப் போகும் அங்கத்தினர்களுக்காக வரியை இரட்டிப்பாக்கும் உத்தேசம் இல்லை (சிரிப்பு).

Tax on sale of food and drinks.

* 66 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the Government are aware that sales tax is being collected from consumers by some leading Hotels?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம். உணவு, பான விற்பனைகளுக்கு விற்பனை வரி உண்டு. ஆகவே உணவகங்கள் அத்தகைய விற்பனைகளுக்கு வரி வசூலிப்பது சட்டத்திற்குப் புறம்பானது அல்ல.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசுத் துறையிலும், நகராட்சிகளிலும் நடத்தக்கூடிய பயணிகள் விடுதிகளில் அளிக்கப்படும் உணவு வகைகளுக்குக் கூட வரி வசூலிக்கப்படுகிறது. அதையாவது ரத்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படி எங்கு வசூலிக்கப்படுகிறது என்ற தகவல் என்னிடம் இல்லை. அப்படி இருந்தால் அதைப் பற்றி அரசு பரிசிலனை செய்யும்.